Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 195 | வியாழக்கிழமை 09 ஜூன் 2022 | வைகாசி 26 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50



"இந்த நேரத்தில ஆளா ளுக்கு ஈகோ பார்த்து, மல் லுக்கட்டுறதால சனங்கள் எல்லோ இன்னும் கஷ்டப் படப் போகுதுகள்..."

மின்சார சபை பொறியியலாளர்கள்

# நள்ளிரவு முதல் போராட்டம் நாடு இருளில் மூழ்கும் அபாயம்

படிப்படியாக அனைத்தும் செயலிழக்கும் என எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 9

மின்சார சபைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்புப் பேராட்டத்தை ஆரம்பித்ததால் நாட்டில் மின்வெட்டு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படு கின்றது. பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரி வித்துள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 72 மணிநேர தொடர் மின்வெட்டை ஒத்ததாக இருக்கும் என்று தெரிவித் துள்ளனர். 15 ➤

## யாழ். மாவட்டத்துக்கு 900 சிலிண்டர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று 900 லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் பகிர்ந் 15 ➤

## மின்விநியோகம் அத்தியாவசியம்

வர்த்தமானி நேற்றிரவு வெளியீடு

கொழும்பு, ஜூன் 9

மின் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியால் வர்த்தமானி அறி வித்தலொன்று நேற்றிரவு அவசர அவசரமாக வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் மின் விநியோகம் அத்தியாவசிய சேவையாக பிர கடனப்படுத்தப்பட்டுள்ளது. 15 ➤

## சஜித் அணியில் இருந்து விலகுகிறது சம்பிக்க அணி

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்ட ணியில் இருந்து நாடா ளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரண 15 ➤

தமிழக அரசின் உதவித் திட்டம்

## யாழ்ப்பாணம் வருகிறது இரண்டாம் கட்ட அரிசி!

யாழ்ப்பாணம், ஜூன் 9

தமிழக அரசின் உதவித் திட்டத்தின் கீழ் இரண் டாம் கட்டமாக வழங்கப் படவுள்ள அரிசி இன்று காலை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வைத்து பிரதேச செயலா ளர்களிடம் கையளிக்கப் படவுள்ளது.

50 கிலோ கிராம் பொதி களாக 9 ஆயிரம் அரி சிப் பொதிகள் இன்று கொண்டு 15 ➤

## லொறி உடைத்து உபகரணம் திருடியவர் மாட்டுப்பட்டார் நேற்று!



யாழ்ப்பாணம், ஜூன் 9

கோண்டாவிலிலுள்ள களஞ்சிய வளாகம் ஒன் றில் நிறுத்திவைக்கப்பட்டி ருந்தபாரவூர்தியை உடைத்து சுமார் 11 லட்சம் ரூபா பெறு மதியான இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள் 15 ➤

## மின்சார சபையினருடன் மல்லுக்கு நிற்கும் காஞ்சன

கொழும்பு, ஜூன் 9

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித்திட்டங்களுக்கு மின்சார சபை ஆதரவ ளிக்காததால், மின் கட்ட ணத்தை அதிகரிப்பதற் கான இலங்கை மின்சார சபையின் 15 ➤

## யாழ். நகரில் மாயமான ஓட்டோ பருத்தித்துறையில் சிக்கியது!

துன்னாலை வாசியும் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் திருடப்பட்ட முச்சக்கர வண்டி ஒன்று நேற்று பருத்தித்துறையில் மீட்கப்பட் டுள்ளது. பருத்தித்துறை பொலிஸ் விசேட 15 ➤

## நாடாளுமன்றத்துக்கு வருகிறார் தம்மிக்க?

கொழும்பு, ஜூன் 9

இலங்கையின் முதன் நிலை கோடீஸ்வர வர்த் தகரானதம்மிக்கபெரேரா இந்த வாரத்துக்குள் நாடா ளுமன்ற உறுப்பினராக வும், அமைச்சராகவும் பதவியேற்பார் என்று அரச தகவல்கள் தெரி விக்கின்றன. 15 ➤

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு கோட்டை நீதிமன்றம் பிடியாணை!

கைதில் இருந்து தப்புவதற்கு பெரும் பிரயத்தனம்

கொழும்பு, ஜூன் 9

தன்னைக் கைது செய்வ தைத் தடுக்கக் கோரி நாடாளுமன்ற உறுப்பி னர் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ மேன்முறை யீட்டு நீதிமன்றில் ரிட் மனுத்தாக்கல் 15 ➤

## சேமித்த பெற்றோல் தீப்பிடித்து ஆசிரியை பரிதாபமாகச் சாவு!



யாழ்ப்பாணம், ஜூன் 9

அறைக்குள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற் றோல் தீப்பிடித்ததில் தீக்கா யங்களுக்குள்ளான ஆசி ரியை ஒருவர் சிகிச்சை பய னின்றி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று வட மராட்சி கிழக்கு, உடுத்து றையில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த பிரபாகரன் 15 ➤

## இராணுவம் பிடித்த காணிகளை இப்போதாவது விடுவியுங்கள்!

ஆறு. திருமுருகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 9

போர்க்காலத்தில் தமிழ் மக்களின் பயன்தரு நிலங்கள் இரா ணுவத்தால் பிடிக்கப்பட்டன. தற்போது நாடு பட்டினியை நோக்கி நகரும் நிலையில், தற்போதாவது அவற்றை மக்க ளிடம் கையளிக்க வேண்டுமென்று இலங்கை இந்து மாமன் றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத் தியுள்ளார். (விரிவு - பக்கம் 05)

## பதவி விலகுகிறார் பஸில்!

கொழும்பு, ஜூன் 9

முன்னாள் நிதியமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ச இன்று நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளார் என்றும், அவர் இன்று ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளார் என்றும் அறியமுடிகின் றது. (விரிவு - பக்கம் 02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியைத் துறக்கிறார் பஸில்



**கொழும்பு, ஜூன் 9**

**பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுத்து இவ்வாரத்துக்குள் அல்லது அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு முன்னர் அவர் பதவி விலகுவார் என தெரியவருகின்றது.**

பஸில் ராஜபக்சவுடன் மேலும் இரு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் எனவும் தெரியவருகின்றது. அவர்கள் இருவரும் இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பதற்கு 21 ஆவது திருத்தச்சட்ட வரைவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே 21 ஆவது திருத்தச்சட்டவரைவு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பஸில் உள்ளிட்டவர்கள் பதவி விலகுகின்றனர்.

அதேவேளை, பிரபல கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர், பஸிலின் இடத்துக்கு நியமிக்கப்பட்டு, அவருக்கு முக்கிய அமைச்சு பதவியொன்று வழங்குவதற்கான பேச்சுகளும் இடம்பெற்று வருகின்றன. (ஒ-44)

*சிமெந்து*

## விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு: நிர்மாணப் பணிகள் நிறுத்தம்



கொழும்பு, ஜூன் 9

சிமெந்து விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து நிர்மாணப் பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கைத் தேசிய கட்டடத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வரும் பலர் வேலையிழந்துள்ளதால், அவர்கள் பயிர்ச்செய்கையை நோக்கிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக அமைச்சர்கள் பலருடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

வற் வரி அதிகரிப்பால் சிமெந்து பைக்கெற் ஒன்றின் விலையை அதிகரித்துள்ளதாக சிமெந்து நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

கட்டுமானப் பொருள்களின் விலைகள் பெருமளவில் உயர்ந்துள்ளதால் நிர்மாணத்துறை தற்போது மந்த நிலையில் உள்ளது.

தற்போது எமது சங்கம் அனைத்து கட்டுமானங்களையும் நிறுத்திவிட்டது. அனைத்து கட்டுமானங்களையும் நிறுத்துமாறு மக்களையும் கோருகின்றோம். வெளிநாட்டு நிறுவனங்கள் இறக்குமதி செய்யும் சிமெந்தை பொதுமக்கள் வாங்குவதை நிறுத்தவேண்டும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிமெந்து விலையையும் ஆய்வு செய்ய வேண்டும்.

இலங்கையில் உள்நாட்டில் கிடைக்கும் சிமெந்து தாராளமாக உள்ளது. இறக்குமதி செய்யும் சிமெந்து மூலம் இந்த விலை நிர்ணயிக்கப்படுகின்றது. அதே விலை உள்ளூர் உற்பத்தியாளர்களால் நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே இறக்குமதி செய்யப்படும் சிமெந்துக்கு நுகர்வோர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, உள்ளூர் சிமெந்தை வாங்கினால், அது நியாயமான விலைக்குக் கிடைக்கும் - என்றார். (ஒ-14,இ)

*பொருளாதார நெருக்கடி நிலை*

## நாடாளுமன்ற அறிக்கைகள் இனி காகிதங்களில் வராது

கொழும்பு, ஜூன் 9

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலைமையை அடுத்து, நாடாளுமன்ற அறிக்கைகளை, இனிவரும் நாள்களில் மின் பதிப்புகளாக மட்டுமே வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. காகித அச்சுக்களாக அவை வெளியிடப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவித்து இந்த வேலைத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் தெரிவித்தார்.

அச்சுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் உள்ள தற்போதைய சுற்றுச்சூழல் சிக்கல்கள், இறக்குமதி செய்யப்பட்ட குறுந்தகடுகளை பெறுவதற்காக ஏற்படும் அதிக விலை, அத்துடன் மறுசுழற்சி இன்மையால் சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதகமான தாக்கங்கள் என்பவற்றைக் கவனத்தில்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (ம)

## விறகைப் பயன்படுத்தினால் ஆயுள்காலம் அதிகரிக்கும்!

*சரத் வீரசேகர எம்.பி. கண்டுபிடிப்பு*



கொழும்பு, ஜூன் 9

விறகைப் பயன்படுத்துவதன் மூலம் ஆயுள்காலம் அதிகரிக்கும். ஆதலால், விறகுப் பயன்பாடு தொடர்பான பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நவீன, சுத்தமான எரிசக்தியை பயன்படுத்தும் நாடுகளில் உள்ள மக்களின் ஆயுட்காலம் சுமார் 80 வருடங்கள். விறகு பயன்படுத்தும் இலங்கைப் பெண்களின் ஆயுட்காலம் 80.1 வருடங்கள். அதாவது இலங்கையில் சில குறிகாட்டிகள் தெற்காசியாவில் மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளன. விறகுகளை பயன்படுத்துவது நாட்டின் வளர்ச்சிக்காகவே தவிர வீழ்ச்சிக்காக அல்ல. எனவே விறகு விநியோகம் மற்றும் பாவனை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். நாட்டின் இறையாண்மை மற்றும் எரிசக்தி மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு விறகுகளின் பயன்பாடு ஒரு முக்கிய காரணியாகும் - என்றார். (ம)

## போதைப்பொருள் கடத்தலை காட்டிக்கொடுத்தோர் கொலை

*பொலிஸார் அதிர்ச்சித் தகவல்*

இலங்கையில் கடந்த ஐந்து நாள்களில் 7 பேர் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவர்கள் அனைவரும் பாதாள உலகத் தலைவர்களின் உத்தரவுக்கு அமையவே கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:-

கடந்த 5 நாள்களில் 7 பேர் மர்மநபர்களால் சுட்டுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பாதாள உலகத் தலைவர்களின் உத்தரவுக்கு அமையவே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவும் உறுதியற்ற சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தக் கொலைகள் அரங்கேற்றப்படுகின்றன. கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் கடத்தலுக்கு சாட்சியாக இருந்தவர்கள். அண்மைக்காலமாக பெருந்தொகை போதைப்பொருளை பொலிஸார் மீட்டுள்ளனர். அவர்களுக்கு துப்பு வழங்கியவர்களே தற்போது கொலை செய்யப்பட்டு வருகின்றனர் - என்றனர்.

அதேநரம், இந்தப் படுகொலைகளின் பிரதான சூத்திரதாரி லண்டனில் வசிக்கின்றார். டுபாய் உள்ளிட்ட பல நாடுகளில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் கூட்டணி அமைத்துள்ளார்.

குறித்த நபர், இலங்கையிலுள்ள பிரபலமான அரசியல்வாதிகளுடன் நெருக்கமாகச் செயற்படும் ஒருவராவர். தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளுக்கு கோடிக்கணக்கில் செலவு செய்துள்ளார். அரசியல்வாதிகள் சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொள்வனவு செய்வதற்கு கோடிக்கணக்கில் பணம் வழங்கியுள்ளார். பிரபல அரசியல்வாதியொருவர் அண்மையில் பிரிட்டனுக்கு பயணம் செய்திருந்த போது குறித்த போதைப்பொருள் வியாபாரியை ஹோட்டலில் சந்தித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

*அரச நிறுவனங்களின்*

## தகவல்களை சமூக ஊடகம் ஊடாக அனுப்ப நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 9

அரச நிறுவனங்களால் காகிதங்கள் மூலம் அனுப்பப்படும் தகவல்கள் அனைத்தையும் வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களில் காகிதங்களுக்காக செலவிடப்படும் பணத்தை சேமிப்பதற்காகவே இந்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அரச நிறுவனங்களின் வருடாந்த மற்றும் அரையாண்டு அறிக்கைகளை நாடாளுமன்றம், கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஈபுக் வடிவில் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆண்டுதோறும் பல்வேறு படிவங்கள் மற்றும் அறிக்கைகளுக்கான காகிதத்திற்காக பெருந்தொகை செலவு ஏற்படுகிறது. இதனால் புதிய வேலைத்திட்டத்தின் கீழ், அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களைச் சமூக ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் திரைகளில் காட்சிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14,இ)

*பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால்*

## யாழ்ப்பாணத்தில் நேற்று சிறப்புச் சோதனைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பரவலாக சிறப்புச் சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டன.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரித்து விற்றமை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை விற்பனை செய்யாது சேமித்து வைத்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு அமைவாகவே இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. (ம-17,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபையின் சட்டத்தில் திருத்தம்: எதிர்ப்புத் தெரிவித்து பணிப்புறக்கணிப்பு

**கொழும்பு, ஜூன் 9**

**இலங்கை மின்சாரசபை சட்டத்தில் முன்வைக்கப்படவுள்ள திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று நள்ளிரவுமுதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.**

மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கே இலங்கை பொறியியலாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக தாமதமாகிவரும் புதுப்பிக்கத்தக்க மின்திட்டங்களுக்கு விரைவான அனுமதி மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு வழிவகுக்கும் திருத்தங்களை அமைச்சர் விஜேசேகர நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார். மின்துறை மற்றும் நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்கள் இன்றியமையாததாக இருக்கும் என்றும், இதன்மூலம் பொதுமக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதுடன் குறைந்த செலவில் மின்சாரம் வழங்க வழிவகுக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அமைச்சர் முன்வைக்கும் இந்தத் திருத்தங்களுக்கே மின்சாரசபையின் பொறியியலாளர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை செயற்படுத்துவதில் மின்சாரசபை தொழிற்சங்கங்கள் நாசவேலை செய்வதாக அமைச்சர் முன்னதாகக் குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத்தக்கது. (ம)



## ராஜீவ் காந்தி தாக்கப்படுவதை படம்பிடித்தவர் காலமானார்!

கொழும்பு, ஜூன் 9

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கைக் கடற்படை வீரர் தாக்குவதை படம்பிடித்த பிரபல ஒளிப்படப் பிடிப்பாளர் சேன விதானகம நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு வயது 80.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பில் இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையின்போது இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை, இலங்கை கடற்படைச் சிப்பாய் துப்பாக்கியால் தாக்குவதை சேன விதானகம படம்பிடித்திருந்தார். (ம)

## 6 நாள்களுக்கு லிட்ரோ எரிவாயு விநியோகம்




கொழும்பு, ஜூன் 9

அடுத்துவரும் 6 நாள்களுக்கு எரிவாயு விநியோகம் இடம்பெறும் என்று லிட்ரோ நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

3 ஆயிரத்து 900 மெட்ரிக் தொன் எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பலொன்று நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

இந்த நிலையில் எஞ்சிய 2.5 மில்லியன் அமெரிக்க டொலரைச் செலுத்தி எரிவாயுவை இறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமையவே அடுத்துவரும் 6 நாள்களுக்கு எரிவாயு விநியோகம் இடம்பெறும் என்று லிட்ரோ நிறுவனத் தலைவர் தெரிவித்தார். (ஒ-14.இ)

## எம்பிகளுக்கு பலாக்காய் !



கொழும்பு, ஜூன் 9

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு பலாக்காய், ஈரப்பலா, வற்றாளைக் கிழங்கு என்பவற்றை உணவாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, பாதுகாப்பான வனப் பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படும் பலாக்காய் போன்றவற்றைப் பறிப்பதற்கு, வனங்களுக்கு செல்ல பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார்.

இதனையடுத்தே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பலாக்காய் உள்ளிட்டவைகளை உணவாக வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். (ஒ-14.இ)

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 91 பேர் கைது



கொழும்பு, ஜூன் 9

இலங்கையிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக வெளிநாடு தப்பிச்செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 91 பேர் சிலாபம், மாரவெல பகுதிகளில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை கட்டளைப் பிரிவின் குழு மாரவில பொலிஸாருடன் இணைந்து நேற்றுமுன்தினம் காலை மாரவில பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். இதன்போதே கடல்வழியாக சட்டவிரோதமாக தப்பிச் செல்ல முயன்றவர்கள் என சந்தேகிக்கப்படும் கடத்தல்காரர் உள்ளிட்ட 15 பேர் அந்தப் பகுதியில் உள்ள விடுதியில் தங்கியிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, சிலாபம் கடற்கரையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படைக் குழுவினர், சந்தேகத்துக்கிடமான பலநாள் மீன்பிடி படகொன்றை அவதானித்து அதனை சோதனையிட்டனர். இதன்போது 58 ஆண்கள், 5 பெண்கள், 6 குழந்தைகள் மற்றும் கடத்தலில் ஈடுபட்ட 7 பேர் என 76 பேர்கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அந்தந்தப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கொழும்பு** அரசியலில திடீர் மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கு. கப்புடா புகழ் பஸில் தன்ர எம்.பி பதவியை ரிசைன் பண்ணிட்டு, இனிமேல் கட்சியைப் பலப்படுத்துற வேலையை மட்டும் பாக்கப் போறாராம். அவருக்குப் பதிலா இலங்கையின்ர நம்பர் வண் பணக்காரர் தம்மிக்க பெரேரா வரப்போறார் எண்டும்,அவருக்கு நிதியமைச்சு இல்லாட்டி வர்த்தக அமைச்சைக் குடுக்கிறதுக்கு கோத்தா ரெடி எண்டும் கதை அடிபடுகுது.

காலிமுகத்திடல் போராட்டத்தால மொட்டுக் கட்சி கிட்டத்தட்ட கருகிற கட்டத்துக்குப் போட்டுது. இப்பிடியே போனால் பிரதேச சபை எலக்சனில கூட, அந்தக் கட்சிக்கு ஒரு சீற்றும் கிடைக்காது. அதைவிட 21 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்தால்தான் உதவி செய்வம் எண்டு உலகவங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ரணிலுக்குச் சொல்லியிருக்கினமாம். அதை ரணில் கோத்தாவிட்ட , ' 21 ஆவது திருத்ததைக் கொண்டு வராட்டி நாடும் அம்போ, உங்கட பதவியும் அம்போ. ஆனால் பஸில் , அந்தத் திருத்தம் வந்தால் தன்ர எம்.பி பதவி போடுமெண்ட பயத்தில , 21 ஐ வரவிடாமல் தடுக்கப் பாக்கிறார்' எண்டு சொல்லியிருக்கிறார்.

இப்ப 'அண்ணன் என்னடா, தம்பி என்னடா அவசரமான உலகத்தில' எண்ட மனநிலையிலதான் கோத்தா இருக்கிறார். அதாலதான் அண்ணன் எண்டும் பாராமல் , தன்னைக் காப்பாத்துறதுக்காக மஹிந்தவை பதவியை விட்டுப் போகச் சொன்னவர். உண்மையில சனம் 'மைனா கோ ஹோம்' எண்டதை விடவும், 'கோத்தா கோ ஹோம்' எண்ட்டு கோத்தாவை வீட்டுக்க அனுப்பத்தான் கடுமையாப் போராடினதுகள். ஆனாலும் மஹிந்தவைப் பலி குடுத்து தற்காலிகமாக தன்ர பதவியை கோத்தா காப்பாத்திப் போட்டார்.

இப்ப அடுத்த தடை பஸில். பஸில் எம்.பியா இருக்கும் வரை வெளிநாட்டு உதவியள் கிடைக்காது. இப்பிடியே நிலைமை தொடர்ந்தால், நாடு சுடுகாடாகிடும். அத்துகோரள எம்.பிக்கு நடந்த மாதிரி எல்லா எம்.பிகளுக்கும் நடக்கிற அளவுக்கு நிலைமை மோசமாகிடும். கோத்தாபயவுக்குக் கூட அப்பிடியான நிலைமை வரலாம். பசி வந்தால் பத்தும் பறந்து போடும். அந்தப் பசியோட கொதிக்கிற சனத்துக்கு முன்னால, நான் பதவியில இருந்து போகமாட்டன் எண்டு அடம் பிடிச்சால், இப்பிடியான கதிதான் கடைசியில கிடைக்கும். அதாலதான் கூட்டிக் கழிச்சுப் பார்த்துட்டு, இப்ப பஸிலையும் பலி குடுக்க கோத்தா ரெடியாகிட்டார். என்னதான் கட்சியைப் பலப்படுத்தப்போறன் எண்டு பஸில் சொன்னாலும், ரண்டு மூண்டு நாளைக்குள்ள அவர் அமெரிக்கா போறதுக்கான எல்லா அலுவலும் கோத்தா செய்திட்டாராம். அதோட பணக்காரரான தம்மிக்கவை அமைச்சராக்கினால், அவர் வெளிநாடுகளில உள்ள நிறுவனங்களில இருந்து தன்ர செல்வாக்கைப் பாவிச்சு, இலங்கைக்கு எரிபொருள், அத்தியாவசியச் சாமான்களை கொண்டுவர உதவி செய்வார் எண்டும் கோத்தா நம்புறார். இப்பிடித்தான் ஏழுமூளை உள்ள பஸில் இலங்கையின்ர பொருளாதாரத்தை எங்கேயோ கொண்டு போவார் எண்டு கோத்தா நம்பினவர், கடைசியா அவர் கொண்டந்து சுடலைக்குள்ள தான் நாட்டை விட்டிருக்கிறார். பிறகு ரணிலைப் பிரதமராக்கினால் டொலர் மழை இலங்கையில பெய்யுமெண்டு கோத்தா நம்பினார். டொலர் மழை மட்டுமில்ல, தெற்கில பருவ மழை கூட ஒழுங்காப் பெய்யேலையாம்.

இப்ப தம்மிக்கவை நம்பிறார். பாப்பம், என்ன நடக்கப் போகுதெண்டு.



- பட்சி

# ஸ்மார்ட் கைத்தொலைபேசியின் குறைந்த விலை ரூ. 80 ஆயிரம்

கொழும்பு, ஜூன் 9

**அரசு விதித்துள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளாலும், அண்மைக் காலமாக உயர்த்தப்பட்ட வரிகளாலும் ஸ்மார்ட் கையடக்கத்தொலைபேசியின் குறைந்தபட்ச விலை விரைவில் ரூ.80 ஆயிரம் முதல் ரூ.90 ஆயிரம் என்ற வரம்பை எட்டும் என விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.**



கடந்த பருவ காலத்தில் சுமார் 20 ஆயிரம் ரூபாவாக இருந்த ஸ்மார்ட் கையடக்கத்தொலைபேசி ஒன்றின் விலை தற்போது 50 ஆயிரம் ரூபாவை தாண்டியுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதே சமயம், கைத்தொலைபேசி உபகரணங்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளதால், நுகர்வோர் கையடக்கத்தொலைபேசியின் கொள்வனவை தவிர்த்து வருகின்றனர். இதனால், பல கையடக்கத்தொலைபேசி விற்பனை நிலையங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட சில நாள்களில் கொள்வனவாளர்கள் வராத நிலையில் தமது வர்த்தக நிலையங்கள் இருப்பதாகவும் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-இ)

## எரிபொருள் பவுஸர் ஒன்றை மறைத்து வைத்தவர் கைது

கொழும்பு, ஜூன் 9

சபுகஸ்கந்த தனியார் நிறுவன வளாகத்தில் சட்டவிரோதமான முறையில் 3 ஆயிரத்து 500 லீற்றர் டீசல் அடங்கிய எரிபொருள் பவுஸரை மறைத்து வைத்திருந்த 50 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோனஹேன முகாமில் சிறப்பு அதிரடிப்படையினரால் நடத்தப்பட்ட சோதனையின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேக நபர் சப்புகஸ்கந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம)

## கொழும்பு – யாழ். ரயில் சேவை தினமும் 3 லட்சம் ரூபா இழப்பாம்

கொழும்பு, ஜூன் 9

கொழும்பு, யாழ்ப்பாணம் கடுகதி ரயில் சேவையால் ஒரு தடவை பயணத்துக்கு 3 லட்சம் ரூபா இழப்பு ஏற்படுகின்றது -என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ரயில் கட்டணம் அதிகரிக்கப்படுமா என்று நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ரயில் போக்குவரத்து சேவையை முன்னெடுப்பதற்கு டீசலுக்கு அதிகம் செலவிடவேண்டியுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு இரவு நேர கடுகதி ரயில் சேவையை முன்னெடுப்பதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு எரிபொருளுக்காக மட்டும் 13 லட்சம் ரூபா செலவிடப்பட வேண்டும்.

500 பேர் பயணித்தால், பயணியொருவரிடம் 2 ஆயிரம் ரூபா அறவிட்டால் 10 லட்சம் ரூபாதான் கிடைக்கும். எனவே, ஒரு தடவை பயணத்துக்கு 3 லட்சம் ரூபா இழப்பு ஏற்படுகின்றது.

எனவே, ரயில் கட்டணத்தை, பஸ் கட்டணத்தில் பாதியாகக் கொண்ட பொதுக் கொள்கையொன்றை உருவாக்க வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ-44)

## மரக்கறிகளின் விலை 50 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 9

அத்தியாவசியப் பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், சந்தைகளில் மரக்கறி மற்றும் மீன்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன.

இதற்கமைய மரக்கறிகளின் விலைகள் சுமார் 50 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

போஞ்சி, தக்காளி, கறி மிளகாய் ஆகியவற்றின் மொத்த விற்பனை விலை ஒரு கிலோ 500 முதல் 700 ரூபாவாக அதிகரித்துள்ளது. அவற்றின் சில்லறை விலை ஆயிரம் ரூபாவைத் தாண்டியுள்ளது. அத்துடன் அடுத்துவரும் வாரத்தில் மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கம்பஹா, பேலியகொடை மீன் சந்தையில் ஒரு கிலோ கெலவல்லா மீன் 2 ஆயிரம் ரூபாவாகவும், ஒரு கிலோ தலபத் மீன் ஆயிரத்து 700 ரூபாவாகவும், பலயா மீன் ஒரு கிலோ ஆயிரம் ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ஒ-14-இ)



## ஊடகவியலாளருக்கு கடற்படை அச்சுறுத்தல்

முல்லைத்தீவு, ஜூன் 9

வட்டுவாகல் காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட போராட்டத்தை அறிக்கையிட சென்ற ஊடகவியலாளருக்கு கடற்படை மற்றும் பொலிஸாரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்படைத் தளத்துக்காக தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை சுவீகரிப்பதற்காக அளவீட்டுப் பணிகள் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த நிலையில், அதற்கு எதிராக காணி உரிமையாளர்களும் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அறிக்கையிடுவதற்காகச் சென்ற ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணனுக்கு கடற்படையினர், முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களால் இடையூறு மேற்கொள்ளப்பட்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் போராட்டம் மேற்கொண்ட இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளரை நோக்கி வந்த கடற்படை அதிகாரியொருவர், 'இங்கு புகைப்படம் எடுக்கமுடியாது' என அச்சுறுத்தியதோடு பொலிஸாரை அழைத்து இவரது ஊடக அடையாள அட்டையைப் பரிசோதியுங்கள் என கட்டளையிட்டதோடு, குறித்த ஊடகவியலாளரைக் கைது செய்யுமாறும் பணித்தார். இதையடுத்து அப்பகுதியில் கடமையில் இருந்த இரண்டு பொலிஸார் ஊடகவியலாளர் குமணனை கைகளால் கோர்த்து தடுத்து வைத்திருந்ததுடன் ஊடக அடையாள அட்டையை காண்பிக்குமாறு வற்புறுத்தியதோடு கைத்தொலைபேசியில் ஊடக அடையாள அட்டையை ஒளிப்படமும் எடுத்துக்கொண்டனர். பிறிதொருவர் ஊடகவியலாளர் குமணனை நெருங்கிவந்து ஒளிப்படம் எடுத்துக்கொண்டு EP BGJ 0353 என்ற இலக்கத்தகடுடைய மோட்டார் சைக்கிளில் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் சிவில் ஆட்சியை உறுதி செய்யவேண்டிய பொலிஸார், முப்படைகள் மற்றும் புலனாய்வாளர்களின் ஊதுகுழலாக செயற்பட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

### தண்டனையை எதிர்த்து

## பிரசன்ன ரணதுங்க மேன்முறையீடு

கொழும்பு, ஜூன் 9

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தனக்கு விதிக்கப்பட்ட 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு மனுவொன்றை சட்டத்தரணிகள் ஊடாக தாக்கல் செய்துள்ளார்.

அமைச்சரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான மனுவை கொழும்பு மேல் நீதிமன்ற பதிவாளரிடம் சமர்ப்பித்தனர்.

வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி கப்பம் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அத்துடன், இரண்டரைக் கோடி ரூபா அபராதம் செலுத்தத் தவறின் 9 மாதங்கள் சிறைத்தண்டனையும் மேலும் பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈடு செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைதண்டனையும் வழங்கப்படும் என்று உத்தரவிடப்பட்டது. (ஒ-14-இ)

## இ.போ.ச. எரிபொருள் நிலையத்தில் தனியாருக்கு எரிபொருள் வழங்கல்

இலங்கைப் போக்குவரத்துச் சபை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்று முதல் சில தரப்பினருக்கு எரிபொருள் வழங்கப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்கள், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் சுற்றுலாத்துறையில் ஈடுபடும் வாகனங்கள் ஆகியவற்றுக்கே எரிபொருள் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய குறிப்பிட்ட நபர்கள் தங்களுக்கு அருகில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)

## அத்துகோரள எம்.பி. கொலை; மேலும் 3 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூன் 9

பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள கொல்லப்பட்டமை தொடர்பில் மேலும் 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிட்டம்புவ பகுதியில் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி, வன்முறை கும்பலால் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவும், அவரது மெய்ப்பாதுகாவலரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த தினத்தில் கொட்டாவ பகுதியில், நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலும் மேலும் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருங்கன் ஆதார மருத்துவமனையில்

# கண்சிகிச்சை கிளினிக் ஆரம்பம்

மன்னார், ஜூன் 9

மன்னார் முருங்கன் ஆதார மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் கண் சிகிச்சைக் கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடியில் கண்பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு வருகை தர மக்கள் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் அவர்களது போக்குவரத்து மற்றும் ஏனைய சிரமங்களை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இந்தக் கண் சிகிச்சைக் கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கண்சிகிச்சைக்கான உபகரணங்கள் முதனிலை, இரண்டாம் நிலை மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யும் பீ.எஸ்.எஸ்.பீ. செயற்றிட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

கண்சிகிச்சை கிளினிக் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-14-56)

# மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கியவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்புக்குளம் பகுதியில் மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கிய நபரொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உப்புக்குளம் பகுதியில் மாட்டை இறைச்சியாக்கிக் கொண்டிருப்பதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது 92 கிலோ மாட்டிறைச்சியைக் கைப்பற்றினர். அத்துடன் மாட்டை இறைச்சியாக்கப் பயன்படுத்திய மூன்று கத்திகளும் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து 35 வயதான நபரொருவரைக் கைது செய்த பொலிஸார் அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். (ஒ-14-125)

பட்டினிச் சாவுக்கு முன்னர்

# இராணுவம் அத்துமீறி பிடித்துள்ள விவசாய நிலங்களை விடுவியுங்கள்

## ஆறு.திருமுருகன் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

**போர்க்காலத்தில் தமிழர்களின் பயன்தரு நிலங்கள் பல இராணுவ தேவைக்காக பறிக்கப்பட்டன. அவற்றை இன்றைய சூழலிலாவது கையளியுங்கள் என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கைத் திருநாடு இன்று சீரழிந்து வாழும் வழி தெரியாது தவிக்கிறது. அறங்களைப் பேணாத காரணத்தாலும் பொருளாதார வளங்களை அறிவு ரீதியில் திட்டமிடாத காரணத்தாலும் இன்று இந்நாடு கையேந்தித் தவிக்கிறது. துக்கமாகவும் வெட்கமாகவும் உள்ளது. அறம் பிழைக்கின்ற போதெல்லாம் நாடு அழிவை நோக்கும் என்பது அறநூல்கள் நன்கு எடுத்துரைக்கின்றன. இனிமேலாவது ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் எல்லோரையும் சமமாகக் கருதி செயற்பட வேண்டும்.

இன்றைய இக்கட்டான நிலையில் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் சார்பில் அரசாங்கத்திடம் நாம் விடுக்கும் வேண்டுதல் என்னவென்றால் போர்க்காலத்தில் தமிழர்களின் பயன்தரு நிலங்கள் பல இராணுவத் தேவைக்காகப் பறிக்கப்பட்டன.

அவற்றை இன்றைய சூழலிலாவது கையளியுங்கள். சிறந்த விவசாய பூமியாகிய வலிவடக்குப் பகுதியில் குரும்பசிட்டி, கட்டுவன், பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை பகுதிகளில் பல பொதுமக்களின் நிலங்களையும் சமய சமூக நிறுவனங்களின் நிலங்களையும் இராணுவம் கையளிக்காமல் வைத்துள்ளன. போர் முடிந்து இத்தனை வருடமாகியும் பல பயன்தரும் செம்மண் நிலங்கள் கையளிக்கப்படாமல் உள்ளன. பஞ்சம், பசி, பட்டினியை நோக்கியுள்ள இவ்வேளையிலாவது இந்நிலத்தை மக்களிடம் கையளியுங்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பாக இயக்கச்சியில் எத்தனையோ பொது மக்களின் தென்னந் தோட்டங்கள், வயல்கள் இராணுவத்தின் கையில் உள்ளன. தருவார்கள், தருவார்கள் என்று காணி உறுதிகளோடு மக்கள் அலைந்து கொண்டு இருக்கிறார்கள். முல்லைத்தீவு மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்திலும் பயன்தரு நிலங்கள் பலவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலச் சொந்தக்காரர்கள் விடும் கண்ணீர் நாட்டை ஆள்பவர்களுக்கு சாபமாகிக் கொண்டிருக்கின்றது.

எனவே உடனடியாக அரசாங்கமும் இராணுவ உயர் அதிகாரிகளும் நாட்டின் நன்மைகருதி பொதுமக்களின் நிலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இதை விடுத்து நாம் நாட்டைமுன்னேற்ற முடியாது. பொதுமக்களின் நிலங்களை கையளிக்க வேண்டும் என சிங்கள மக்களும் இவ்வேளையில் ஓங்கிக் குரல்கொடுக்க வேண்டும் -என்றுள்ளது. (ஒ-இ)

# பெற்றோல் குண்டு வீச்சால் பளையில் வீடு சேதம்

கிளிநொச்சி, ஜூன் 9

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் புகுந்த வாள்வெட்டுக்குழு, பெற்றோல் குண்டை வீசி சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிக்கு முல்லையடி கிராமத்தில் இடம்பெற்றது.

இரு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேரைக் கொண்ட குழுவொன்று, வீட்டைத் தாக்கியதுடன் பெற்றோல் குண்டையும் வீசி விட்டுச் சென்றுள்ளது.

இது தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-14-113)

ஜனாதிபதியின்

# முட்டாள்தனமான முடிவுகளே நாட்டின் அழிவுக்கு காரணம்!

## சஜித் சாட்டை

கொழும்பு, ஜூன் 9

ஒரே இரவில் ஜனாதிபதி எடுத்த முட்டாள்தனமான முடிவால் முழு நாடுமே சீரழிந்துள்ளது - என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை அரிசியில் தன்னிறைவு பெற்ற எமது நாடு, ஒரே இரவில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட உரம் தொடர்பான முட்டாள்தனமான முடிவால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமன்றி எதிர்காலத்தில் மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் இரண்டு வேளை உணவை மாத்திரம் உட்கொள்ள வேண்டும் என்று தற்போதைய பிரதமரும் கூறுகிறார். இதற்குப் பொறுப்பானவர்களும், பொறுப்புக்கூற வேண்டியவர்களும் தங்களின் தவறுக்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டாலும் கூட தவறைத் திருத்துவதற்கு இது மாத்திரம் பரிகாரமாக அமையாது.

தமது வாழ்வாதாரமாக விவசாயம் மேற்கொண்டு வந்த மக்களுக்கு விவசாயம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி, பிற தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களை தங்களின் தேவைக்காக விவசாயம் செய்யச் சொல்லிக் கோருவதுதான் இப்போது அரசாங்கத்தின் ஒரே தீர்வாகத் தெரிகிறது. மக்களின் பட்டினியைப் போக்க உணவு விநியோக வலையமைப்பை வலுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் -என்றார். (ம)

# மலையக தோட்டக்காணியில் எப்போதுதான் பயிரிடுவீர்கள்?

## மனோ கணேசன் சபையில் பிரதமரிடம் கேள்வி

கொழும்பு, ஜூன் 9

மலையகத்தோட்டங்களில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் வெற்றுக் காணிகளில் உணவு, கிழங்கு பயிரிட தோட்டத் தொழிலாளருக்கு அனுமதி வழங்குவது பற்றி பேச மாட்டீர்களா? இவ்வாறு கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பிரதமருக்குக் கடந்த வாரமே கடிதம் எழுதினேன். இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய மக்களாக, இன்று ஒருநாளைக்கு ஒருவேளை மட்டுமே உணவு உண்ணும் நிலைமையில் வாழும் தோட்ட மக்களைப் பற்றி உங்களுக்கு கரிசனை இல்லையா? அவர்களுக்குப் பயிரிடக் காணிகள் வழங்கி உதவினால் அவர்கள் உணவுப் பயிர்களைப் பயிரிட்டு, தங்களுக்கும் உணவை பெற்றுகொண்டு, நாட்டுக்கும் வழங்குவார்களே' என்றார். இதற்கு பிரதமர் ரணில், 'தோட்டப்புற வெற்றுக் காணிகளில் பயிரிட தொழிலாளருக்கு வாய்ப்பு வழங்குவோம். 'மனோ கணேசன் திட்டம்' என்று பெயரிட்டே இதை செய்வோம். கவலை வேண்டாம். என்று கூறினார். விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பதிலளிக்கையில், 'இதுபற்றி நேற்று நடந்த கலந்துரையாடலின்போது கூட, பிரதமர் என்னிடம் கூறினார். இதுபற்றிய கலந்துரையாடலை [illegible] உங்களை அதில் கலந்துகொள்ள அழைக்கிறேன்' என்று கூறினார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் 250 வீதம் உயரலாம்

கொழும்பு, ஜூன் 9

**மின்சாரக் கட்டணத்தை 250 வீதத்தால் உயர்த்துவதற்கு இலங்கை மின்சாரசபை தீர்மானித்துள்ளது. இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்காகவே கட்டணத்தை உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பான இறுதித் தீர்மானம் இலங்கையின் அமைச்சரவை மற்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் எடுக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டணங்கள் உயர்த்தப்படாவிட்டால், இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பளம் பாதிக்கப்படுவதுடன், பிற செயற்பாடுகளிலும் சிக்கல்கள் உருவாகும். தற்போது, இலங்கை மின்சார சபையின் வருமானம் 277 பில்லியன் ரூபாவும் செலவு 755 பில்லியன் ரூபாவுமாகும். இந்த நிலையில் செலவுகளை சமாளிக்க மின்கட்டணத்தை உயர்த்துவது அவசியமாகும். மின்கட்டணத்தை அதிகரிப்பது குறித்து அமைச்சரவை விரைவில் முடிவெடுக்கும்.

2014க்கு பிறகு மின்கட்டண உயர்வு இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு கட்டணத்தை உயர்த்தியிருந்தால், மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு இவ்வளவு கடுமையாக இருந்திருக்காது - என்றார். (ம-14-இ)



## இந்திய முதலீட்டின் பயனை வடக்கு மக்கள் அனுபவிப்பர்

### இந்தியத் துணைத்தூதுவர் நட்ராஜ் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 9

இந்திய முதலீடுகளினதும் உதவித் திட்டங்களினதும் பயனை வடக்கு மாகாண மக்கள் இனிவரும் நாள்களில் முழுதாக அனுபவிப்பார்கள் என்று இந்தியத் துணைத்தூதுவர் ராகேஸ் நட்ராஜ்.

வவுனியா மக்களுக்கு உதவித் திட்டங்களைப் பகிர்ந்தளித்த பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் சுமார் இரண்டு லட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் முதல்கட்டமாக பல உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்தும் தமிழ் நாட்டில் இருந்தும் அடுத்த கட்டங்களாக இன்னும் பல உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பல மீனவ சங்கங்கள் தமக்கு மண்ணெண்ணெய் பெற்றுத்தருமாறு என்னிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளன. மாவட்டச் செயலர் ஊடாக அல்லது வட மாகாண செயலாளர் ஊடாகத் தொகுத்து எடுத்துவந்து ஒப்படைக்குமாறு அவர்களிடம் தெரிவித்துள்ளேன். அவ்வாறு ஒப்படைக்கப்படும் பட்சத்தில் அதுகுறித்து நிச்சயம் பரிசீலனை செய்யப்படும் - என்றார். (ம-110)

# துடுப்பாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 9

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் இடையிலான வடக்கின் நீலங்களின் சமர் 11 ஆவது துடுப்பாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

## இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 630 கிலோ கடலட்டை ராமேஸ்வரத்தில் மீட்பு

சென்னை, ஜூன் 9

இலங்கைக்குக் கடத்தவிருந்த சுமார் 630 கிலோ கடலட்டைகள், ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே உள்ள எம்.ஆர்.டி. நகர்ப் பகுதியில் நேற்று மீட்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான தோட்டமொன்றில், கடலட்டைகள் பதப்படுத்தி சேராங்கோட்டை கடற்கரை வழியாக இலங்கைக்குக் கடத்த இருப்பதாக வனத்துறைக்கு கிடைத்த தகவலை அடுத்து குறித்த பகுதியில் ராமேஸ்வரம் வனத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்ட போதே மேற்படி கடலட்டைகளும் மீட்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-14)

## புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக சபா மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் 2020 / 2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், பெற்றோரும் சூம் செயலி ஊடாக கலந்து கொள்ள முடியும். நிகழ்வுக்கான இணைப்புகள் புதுமுக மாணவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல், மற்றும் கைத் தொலைபேசிக் குறுந்தகவல்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், இணைப்புகள் கிடைக்காதவர்கள் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி அலுவலகத்தின் 021 320 5486 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் அறிவித்துள்ளார். (ய-20)





கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கனடாவில் வசிக்கும் பழைய மாணவன் ஜெயச்சந்திரன் வால்மேகம் என்பவரால் பாடசாலை அலுவலக தேவைக்காக கணினி அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டது. (ய-159)

### நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு மீண்டும் சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூன் 9

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதிமன்ற அவமதிப்புக்காக, 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை நேற்று விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பாக உயர்நீதிமன்றில் நடைபெற்ற வழக்கொன்றில் நேற்று முன்தினம் அவரை முற்படுத்திபோது அவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்தே, ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்த இரண்டு வருட சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. பிறிதொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ரஞ்சன் ராமநாயக்க தற்போது சிறையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14-இ)

# நெருக்கடியைத் தீர்க்க கோரிக்கைகள் முன்வைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 9

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் பல்வேறு கோரிக்கைகளை மாவட்டச் செயலருக்கு முன்வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் மட்டக்களப்பு மாவட்டச் செயலருக்குமான சந்திப்பு அண்மையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்தக் கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டதாவது.

மட்டக்களப்புப் பகுதியில் விநியோகிக்கப்படும் அத்தியாவசிய பொருள்களை ஒரு பொறிமுறைக்கு அமைய விநியோகிக்கவேண்டும். விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருள் கள் சகல மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

நாளுக்கு நாள் இங்கு தன்னெழுச்சியாகப் பொருள்களின் விலையேற்றங்கள் ஏற்படுவதால் வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இதனால் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட விலை காணப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளதால் மாவட்டத்திலுள்ள நெல் இங்கு களஞ்சியப்படுத்தப்பட்டு நெருக்கடி காலத்தில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்துடன் மக்கள் போஷாக்குத் தன்மையில் இருப்பதற்கு மட்டக்களப்பில் போதிய பால் உற்பத்தி இருப்பதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் பாலை வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதைக் குறைத்து எமது மாவட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மட்டக்களப்பில் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து கிராமப்புற மக்கள் நியாயமான விலைக்கு பொருள்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு வீடுகளிலும் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க வேண்டும்- என்றுள்ளது. (ம-14-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பஞ்சப் பல்லவிகளுக்கு எப்போதுதான் முடிவு?

'இலங்கை அதன் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மிகக் கடினமான காலத்தை சந்திக்கப் போகின்றது. 24 லட்சம் தொன் அரிசி கையிருப்பில் இருக்க வேண்டிய நிலையில் 16 லட்சம் தொன் அரிசிதான் தற்போது கையிருப்பில் இருக்கின்றது. அதேநேரம் எரிபொருள், எரிவாயு என்பனவற்றுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. மக்கள் மிகுந்த சிக்கனத்துடன் எரிபொருளைப் பயன்படுத்த வேண்டும்' என்றவாறாக அபாயச் சங்கு ஊதியிருக்கின்றார் பிரதமர் ரணில்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் 'சிறப்புரை' என்று அவர் முன்னெடுத்த உரையில் 'சிறப்புக்கள் ஏதுமற்ற' வழக்கமான 'பஞ்சப் பாட்டின்' ஒருபகுதியாகவே இந்த 'சாவு ஒலம்' அமைந்திருக்கின்றது. மஹிந்த பதவி விலகியதை அடுத்து, 'ரணில் வருகின்றார்: தீர்வு தருகின்றார்' என்று பலர் எதிர்பார்க்கவே செய்தனர். அத்தனை பேருக்கும் அவர் கொடுத்த தீர்வு இந்தப் பஞ்சப் பாட்டும், சாவு ஒலம் தொடர்பான முன்னறிவிப்புக்களுமே.

நாட்டில் டொலர் இல்லை என்பது இந்த வாரமோ அல்லது கடந்த வாரமோ தெரியவந்த தகவல் அல்ல. சுமார் ஒரு வருடமாகவே இந்தப் புராணம் பாடப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், டொலரை ஈர்ப்பதற்கு என்ன பொறிமுறையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது? டொலரின் இருப்பிழப்பைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்றது? என்று கேட்டால் கோத்தாபய அன்ட் ரணில் கொம்பனி பல்லிளிக்கும்.


சுற்றுலாவாக இருக்கட்டும், மீன்பிடியாக இருக்கட்டும் அல்லது விவசாயமாகவேனும் இருக்கட்டும் எந்தத் துறையை இவர்கள் தன்னிறைவடையச் செய்துள்ளனர்? கட்டப்படாத வீட்டுக்குத் திறப்பு விழா நடத்துவதைப்போன்று, சீர்குலைந்த நாட்டுக்கு சுற்றுலாவிகளை அழைக்கின்றனர். இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் யார்தான் இங்கு சுற்றுலாவுக்காக வருவார்கள்?. 'தக்கன பிழைக்கும்' என்ற இயற்கையின் நியதியைப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு ஏதேனும் உயிர்ப்போராட்டப் போட்டிகளை வேண்டுமானால் இங்கு நடத்தலாம். பொருத்தமற்ற முடிவுகளைத் தொடர்ச்சியாக எடுப்பதாலேயே நாடு தொடர்ந்தும் சீரழிகின்றது. இதற்குத்தான் துறைசார் நிபுணர்கள் அமைச்சரவையில் உள்வாங்கப்படவேண்டும் என்று மக்கள் வலியுறுத்துகின்றனர்.

இன்று உலகின் இளம் தலைவர்களாக இருக்கும் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன், நியூஸிலாந்துப் பிரதமர் ஜசிந்தா ஆகியோரின் அமைச்சரவையைப் பார்த்து உலகமே வியக்கின்றது. அந்த அமைச்சரவைகளில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஒரு விளையாட்டு வீரன், சிறப்புத் தேவையுடையவர்களுக்கான அமைச்சர் ஒரு மாற்றுத் திறனாளி, எரிசக்திக்கான அமைச்சர் துறைசார் வல்லுநர், விவசாய அமைச்சர் ஒரு விவசாயி. ஏனெனில் அவர்களுக்குத்தான் அந்தத் துறைகளில் நிபுணத்துவம் இருக்கும். அதன் பாரதூரத்தன்மை புரியும்.

நாடாளுமன்றப் பெரும்பான்மையையும் அரசியல் சதிராட்டத்தையும் இலக்குவைத்து அமைச்சர்களை நியமித்தால் பங்களாதேஷில் இருந்துதான் உருளைக்கிழங்கு வரும், ஓமானில் இருந்துதான் உரம் வரும், சீனாவில் இருந்துதான் பள்ளிச்சீருடைகள் வரும், இந்தியாவில் இருந்துதான் திரிபோஷா வரும். இலங்கைக்கு என்று கடனைத்தவிர ஏதும் சொந்தமாக இருக்காது. இப்படிக் கொஞ்சம்கொஞ்சமாக வேறுநாடுகளில் இருந்து பிச்சை எடுப்பதற்குப் பதிலாக மக்ரோன், ட்ரூடோ, ஜசிந்தா போன்றோரின் அமைச்சரவைகளில் இருந்து கொஞ்சக்காலத்துக்கு இரண்டு மூன்று அமைச்சர்களைக் கடனாகக் கேளுங்கள் அது சிலவேளைகளில் விடிவைச் சாத்தியமாக்கும்.

நாளொரு நல்வார்த்தை

"தகுதிக்கு மேல் செலவு செய்வது உன் உயிரை முடித்துக் கொள்ள நீயே கயிறு திரிப்பது போன்றது. - ஜோன்ரேட்




### சர்வதேச நாணயநிதியத்தின்
# முகாமைத்துவப் பணிப்பாளருடன் பிரதமர் ரணில் பேச்சு

கொழும்பு, ஜூன் 9

**நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை பேச்சு நடத்தியுள்ளார்.**

இது தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் தற்போதைய நிதி நிலைமைகள் தொடர்பில் சர்வதேச நாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீண்டநேரம் கலந்துரையாடியுள்ளார். சர்வதேச நாணயநிதியத்தின் ஊழியர்கள் மட்டத்திலான குழு விரைவில் இலங்கைக்குப் பயணம் செய்வதன் மூலம் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை இறுதி செய்யமுடியும் என பிரதமர் கேட்டுக்கொண்டார். இந்த இக்கட்டான காலங்களில் இலங்கைக்கு உதவுவதற்குத்தனது விருப்பத்தை முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார் - என்றுள்ளது. (ம)

# சர்வகட்சி அரசாங்கத்துக்கே சர்வதேசம் கைகொடுக்கும்

## ரணில் அரசாங்கத்தை தாக்குகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜூன் 9

தற்போதைய அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கம் கிடையாது. எனவே, முறையாக சர்வகட்சி அரசாங்கம் கட்டியெழுப்பப்படுமானால், நெருக்கடியில் இருந்து மீள சர்வதேச சமூகம் உதவும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்குமாறு ஜனாதிபதியிடம் மூன்று மாதங்களுக்கு முன்பே கோரிக்கை விடுத்திருந்தோம்.

ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் உட்பட இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச அமைப்புகளுடன் பேச்சு நடத்தினோம். சர்வகட்சி அரசாங்கம் அமைந்து, தேர்தலுக்கான கால எல்லை அறிவிக்கப்பட்டால் உதவி வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.



எனவே, தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் அவசியம். அதற்கு சுதந்திரக்கட்சி முழு ஆதரவையும் வழங்கும், என்றார். (ஓ-44)

நாளை 10.06.2022 வெள்ளிக்கிழமை வைகாசி 27
சுபநேரம் : 05.52 - 07.22
ராகுகாலம்: 10.22 -11.52
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ லம்பேட்

# வங்காலைப் படுகொலைகள்
# கருவறுக்கப்பட்ட குடும்பத்துக்கு எப்போது நீதி?

மன்னார் - வங்காலைப் பகுதியில் இரண்டு குழந்தைகள் உட்பட கணவன், மனைவி என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இன்றுடன் 16 வருடங்கள் ஓடிமறைகின்றன. ஆயினும் அவர்களுக்கான நீதியென்பது இன்னமும் எட்டாக்கனியாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் படுகொலைகளின் குற்றவாளிகள் என்றுதான் கைதுசெய்யப்படுவார்கள்? எப்போதுதான் இறந்தவர்களுக்கு நீதி வழங்கப்படும்? என்பதுதான் இன்றுவரையும் வங்காலையில் வசிக்கும் பல குடும்பங்களின் எதிர்பார்ப்பு.

**இயல்பான பதற்றம் சூழ்ந்திருந்த காலம்**

மன்னார் வங்காலை தோமஸ்புரி கிராமத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலையின் புலர்வு அந்தப் பகுதிக்கே பேரிடியைத்தான் கொண்டுவந்தது. குறித்த பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட நால்வர் மிகக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். தச்சுத் தொழிலாளியான மூர்த்தி மார்டின் (வயது -35), அவரது மனைவி மேரிமெட்டலின் (வயது - 27) மற்றும் பிள்ளை களான ஆன் லக்ஸிகா (வயது-9), ஆன் டிலக்ஸன் (வயது-7) ஆகிய நால்வருமே அவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

குறித்த பகுதியில் அந்தக் காலங்களில் இடம்பெற்ற அச்சமூட்டும் சம்பவங்களால், தோமஸ்புரி கிராம மக்களில் பெரும்பாலானோர் இரவு நேரத்தில் வங்காலை புனித அன்னாள் தேவாலயத்துக்குச் சென்று தங்கிவிட்டு அதிகாலையில் வீடு திரும்புவது வழமை. படையினரின் நடமாட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் அந்தப் பகுதி மக்களை அக்காலத்தில் பதற்றத்துக்குள் தள்ளியிருந்தன. இவ்வாறு கிராம மக்கள் தமது இல்லங்களை விட்டு வெளியேறி அன்னாள் ஆலயத்தில் தூங்கியெழுந்து திரும்பியபோது அவர்கள் கனவிலும் நினைத்திராத அதிர்ச்சியே காத்திருந்தது.



சித்திரவதை செய்து படுகொலை செய்வதற்கு இலக்கணமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன அந்த [illegible] சித்திரா என்று [illegible] மேரிமெட்டலின் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கூரிய உளியால் குத்திக் கிழிக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். அவருடைய கணவன் மற்றும் இரண்டு பிள்ளைகளும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டு சுருக்குக் கயிற்றில் தொங்கவிடப்பட்டிருந்தனர். குருதி வெள்ளத்தில் அந்த சடலங்கள் மிதந்து கொண்டிருந்தன.

**இராணுவமே கொன்றது என மக்கள் கொதிப்பு**

இந்தப் படுகொலை பற்றிய தகவல் அந்தப் பகுதி எங்கும் காட்டுத்தீ போல பரவியது. அப்போதைய மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ரி.ஜே.பிரபாகரன், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம், மன்னார் பிரதேசசெயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல், நானாட்டான் பிரதேச செயலர் என்.திருஞானசம்பந்தர், இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளென பெருமளவானோர் அங்கு திரண்டனர். இவ்வாறு குழுமிய அதிகாரிகளிடம் அந்த மக்கள் முன்வைத்த குற்றச்சாட்டு, 'இராணுவமே இந்தப் படுகொலையைச் செய்தது' என்பதாகவே அமைந்தது. தமது குற்றச்சாட்டுக்குச் சாட்சியாக இராணுவத்தினரின் பொருள்கள், மற்றும் இராணுவத்தினரின் சப்பாத்துத் தடயங்கள் என்பவற்றையும் மக்கள் காட்டினார்கள். இதன் தொடர்ச்சியாக மக்கள் வெகுண்டெழுந்தனர். ஆனால், பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கூடிய விரைவில் நீதி நிலை நாட்டப்படும் என்று மக்களுக்கு வாக்களிக்கப்பட்டது.

ஆனால், அந்த நான்கு உயிர்களும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு சிதைத்துக் கொல்லப்பட்டு இன்றுடன் 16 ஆண்டுகள் முழுமையாகின்றன. இதுவரை நீதி நிலை நாட்டப்படவில்லை. குற்றவாளிகள் யார் என்று அறியப்படவில்லை. ஒரு குடும்பம் ஒட்டுமொத்தமாகக் கருவறுக்கப்பட்டதுகூட இலங்கையின் தேடப்படாத நீதி என்ற பெரும் அத்தியாயத்தின் ஒரு பக்கமாகியமை எவ்வளவு பெரிய அபத்தம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் 12 பேருக்கு ஈரானில் மரணதண்டனை

**தெஹ்ரான், ஜூன் 9**

**ஒரே நாளில் பெண் உட்பட 12 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றி சர்வ தேச மனித உரிமை அமைப்புகளின் கண்டனத்தைப் பெற்றுள்ளது ஈரான் அரசு.**

இந்தத் தண்டனை பற்றி அரசோ, உள்ளூர் ஊடகங்களோ எதுவும் சொல்லாத நிலையில், நோர்வேயைத் தலைமையிடமாகக் கொண்ட ஈரான் மனித உரிமைகள் அமைப்பு இந்தத் தகவலை உலகின் பார்வைக்குக் கொண்டுவந்துள்ளது.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட 12 பேரும் ஈரானின் மதச் சிறுபான்மையி னரான பாலுச் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவருக்கும் கடந்த திங்கட்கிழமையன்று ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைகளை ஒட்டியுள்ள சிஸ்டான் மாகாணத்தில் மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது.

பாலுச் சிறுபான்மையின மக்கள் சன்னி பிரிவை சேர்ந்தவர்கள். ஈரானில் ஷியா முஸ்லிம்கள் தான் ஆதிக்க சக்தியினர்.

மரணதண்டனைக்கு உள்ளான சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த 12 பேரில் 6 பேர் போதைப்பொருள் கடத்தலுக்காகவும் 6 பேர் கொலைக்காகவும் தண்டிக்கப்பட்டவர்கள். இவர்களில் பெண் ஒருவரும் அடங்குவார். அவர் தனது கணவனைக் கொலைசெய்தார் என்று குற்றஞ்சாட்டப் பட்டது. (ம)

# 210 உக்ரைன் சிப்பாய்களின் சடலங்கள் ஒப்படைப்பு!



210 உக்ரைன் சிப்பாய்களின் சடலங்கள் ரஷ்யப் படைகளால் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

டொனட்ஸ்கி, லுஹான்ஸ்ட் நகரங்கள் மீது ரஷ்யப் படைகள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளன. இதனால் உக்ரைன் சிப்பாய்கள் நூற்றுக் கணக்காக அந்தப் பகுதியில் கொன்று குவிக்கப்படுகின்றனர். அவ்வாறு ரஷ்ய ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் கொல்லப்பட்ட 210 உக்ரைன் சிப்பாய்களின் சடலங்கள் உக்ரைனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக உக்ரைனின் நான்கில் ஒரு பகுதியை கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா அறிவித்தது. இதை உக்ரைனும் ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





யாழ்ப்பாண பேருந்துத் தரிப்பிடக் கிளை
இன்று முதல் புதிய இடத்தில்

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பேருந்துத் தரிப்பிடக் கிளையானது சுகாதாரவழிகாட்டல்களுக்கு அமைய இன்று சுபவேளையில் புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ள
எமது கிளைக்கு வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

இலக்கம்: 356, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2221010 | ஃபக்ஸ்: 021 2221010 | மின்னஞ்சல்: boc366@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# வாழ்க்கைச்செலவு கூடிய நகரமானது ஹொங்கொங்

உலகில் வாழ்க்கைச் செலவு கூடிய மற்றும் குறைந்த நகரங்கள் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், வாழ்க்கைச் செலவு கூடிய நகராக ஆசியாவின் ஹொங்கொங் அமைந்துள்ளது.

இ.சி.ஏ. அமைப்பு முன்னெடுத்த ஆய்வுகளின் அடிப்படையிலேயே இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஹொங்கொங் நகரைத் தொடர்ந்து அமெரிக்காவின் நியூயோர்க், சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா, பிரிட்டனின் லண்டன், ஜப்பானின் டோக்கியோ ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

வாழ்க்கைச் செலவு குறைந்த நகரத்தின் பட்டியலில் துருக்கியின் தலைநகர் அங்காரா முதலிடத்தில் உள்ளது. (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பிரச்சினைகள் இன்று முடிவுக்கு வரும். செலவு அதிகரித்தாலும் அதற்கேற்ப வருமானம் வரும். சுய ஆற்றல் வெளிப்படும். உங்கள் செயல்களைக் கண்டு எதிரிகள் பின் வாங்குவார்கள்.

**இடபம்:** எதிர்பார்த்த நன்மை தள்ளிப் போகும். பிள்ளைகளின் வழியே செலவு உண்டாகும். சங்கடம் விலகும். உங்களுடைய அறிவாற்றலால் பிரச்சினைகளில் இருந்து வெளியில் வருவீர்கள்.

**மிதுனம்:** அரசு வழி முயற்சிகளில் எதிர்பார்க்கும் நன்மையை அடைய முடியாமல் போகும். எதிர்பார்த்தவற்றில் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப நெருக்கடி தீரும்.

**கடகம்:** தடைகளை சரி செய்வீர்கள். துணிச்சலுடன் செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். நீண்ட நாள் பிரச்சினைகள் இன்று முடிவுக்கு வரும். தனித்திறமையை வெளிப்படுத்தி புகழடைவீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்படுவது நல்லது. பொருள்களை கையாள்வதில் எச்சரிக்கை, கவனம் தேவை. குடும்ப நிலை உயரும். புதிய சொத்து, நவீன சாதனம் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** இழுபறியாக இருந்த வேலை இன்று முடியும். மனம் மகிழும்படி யான சூழல் உருவாகும். வீட்டில் திருமணப் பேச்சு எழும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன்கள் தேடி வரும்.

**துலாம்:** எதிர்பாராத வகையில் திடீர் செலவு தோன்றும். மனதில் வீண் குழப்பம் வந்து செல்லும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. மனம் விரும்பாத சம்பவம் ஒன்று இன்று நடைபெறும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். செயல்களில் இன்று வெற்றியை சந்திப்பீர்கள். யோகமான நாள். உங்கள் மனம் உற்சாகமடையும். முயற்சியில் இன்று சாதகமான நிலை உருவாகும்.

**தனுசு:** வேலை தேடியவர்களுக்கு நல்ல தகவல் வரும். புதிய தொழில் முயற்சி வெற்றி பெறும். உங்களுடைய ஆற்றல் வெளிப்படும். முயற்சியில் தடைவிலகி நினைத்ததை அடைவீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த விஷயத்தில் தாமதம் ஏற்படும். உங்களை சிலர் விமர்சனம் செய்வார்கள். பிரச்சினை கள் விலகும். செயல்களில் வேகம் உண்டாகும் என்றாலும் முடிவு தாமத மாகும்.

**கும்பம்:** மனநிலை பாதிக்கும் வகையில் சிலர் செயற்படலாம். கவனமுடன் செயற்படுவது நல்லது. தேவையற்ற சங்கடங்களால் சோர்வு ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கையும் கவனமும் தேவை.

**மீனம்:** உற்சாகமுடன் செயற்படுவீர்கள். குழப்பம் விலகி தெளிவடைவீர்கள். ஆதாயம் உண்டாகும். புதிய சிந்தனை மேலோங்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். கணவன்–மனைவிக்குள் இருந்த பிரச்சினைகள் விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பின் தடைகளுக்கு மத்தியில்

# புலிகளின் பொருளாதாரமே தமிழர்களை பாதுகாத்தது

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 9**

**விடுதலைப் புலிகளின் சிறந்த பொருளாதாரத் திட்டம்தான் போர்க்காலத்தில் தமிழர்களைப் பாதுகாத்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளின் தலைவர் இருந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக அந்த மக்கள் அந்த மண்ணில் உற்பத்திகளை மேற்கொண்டனர்.

அப்போது 14 ரூபாவுக்கு அரிசியை வாங்கினர். இங்குள்ள தலைவர்கள் வன்னிப் பகுதிக்கு பொருளாதார தடைகளை விதித்திருந்தபோதும் அந்த மண்ணில் எவரும் பட்டினியில் சாகவில்லை. எறிகணைகளாலும், குண்டுகளாலுமே அங்கிருந்த மக்கள் கொல்லப்பட்டனர் -என்றார். (ம)

## வாழைச்சேனையில் பட்டினிச்சாவு

வாழைச்சேனைப் பகுதியில் உள்ள பொது மைதானமொன்றுக்கு அருகில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவர் பட்டினியால் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. செங்கலடியைச் சேர்ந்த பிள்ளையான் கணேசமூர்த்தி (வயது 69) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் வீட்டிலிருந்து வெளியேறி சுமார் ஆறு நாள்கள் உணவின்றித் தவித்த நிலையில், பட்டினியால் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)



நேபாள நாட்டைச் சேர்ந்த றோட்டறிக் கழகம் நன்கொடையாக வழங்கிய நிதியில், மன்னார் றோட்டறிக் கழகத்தால் பொருளாதாரத்தில் மிகவும் நலிவுற்ற மக்களுக்கான உலர் உணவு விநியோகத் திட்டத்தின் முதல் பகுதியாக மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 50 குடும்பங்களுக்கு பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ஒ-60)

## எரிபொருள் தட்டுப்பாட்டால் தனியார் சேவை பாதிப்பு

### கெமுனு விஜேரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

நாட்டில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டால் தனியார் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எரிபொருள் தட்டுப்பாட்டால் தனியார் பஸ்கள், ஓட்டோக்கள் மற்றும் வாடகை வாகனங்கள் என்பன உரிய முறையில் போக்குவரத்தில் ஈடுபடவில்லை:

நேற்றுமுன்தினம் வரை பல தனியார் பஸ்கள், எரிபொருள் வரிசைகளில் நிறுத்தப்பட்டிருந்தன.

இதனாலேயே குறைந்தளவு பஸ்கள் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்தப்படுகின்றன -என்றார். (ஒ-14-இ)

## சொகுசு வாகனக் கொள்வனவு நடைமுறைப்படுத்தப்படாது!

கொழும்பு, ஜூன் 9

2021ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதித்த, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சொகுசு வாகனக் கொள்வனவுக்கு அனுமதி வழங்கப்படாது என்று சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 50 இரட்டை கெப் வாகனங்கள், 50 தண்ணீர் பவுஸர்கள், 50 அம்புலன்ஸ்கள் கொள்வனவுக்காக 2021ஆம் ஆண்டு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

எனினும், நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டும் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியும், மேற்படி வாகனங்களை இறக்குமதி செய்வது சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரி, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க, அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை தாக்கல் செய்தார்.

இந்த மனு, நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படாது என்று சட்டமா அதிபர் அறிவித்தார். இதையடுத்து மனு திரும்பப் பெறப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டது. (ம)



கடந்த 2020 ஆம் ஆண்டு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இணைந்த பட்டதாரி பயிலுநர்களின் அன்பளிப்பாக, தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்த பொருண்மியம் நலிவடைந்த 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ய-9)

## குடும்பத்தினரால் சிறுமி சீரழிப்பு!

கொழும்பு, ஜூன் 9

மொனராகலை எத்திமலே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 13 வயதான சிறுமியைக் கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் சிறுமியின் மூத்த சகோதரன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமிக்கு வயிற்றுவலி ஏற்பட்டதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே சிறுமி கர்ப்பமாகவுள்ளது தெரியவந்தது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், தன்னை தனது தாத்தா, மாமா மற்றும் மூத்த சகோதரன் ஆகியோர் வன்புணர்வுக்குட்படுத்தியதாக சிறுமி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

சிறுமியின் வாக்குமூலத்தை அடுத்தே, அவரின் சகோதரனைப் பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் சிறுமியின் தாத்தா மற்றும் மாமாவைக் கைது செய்ய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-14-இ)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

வரணி மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய பரஞ்சோதி செல்வவிநாயகம் கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். வரணி மத்திய கல்லூரிக்கு கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய ஆ. தங்கவேலு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ய-159)

## பாதுகாப்பற்ற பாலுறவில் ஒருபோதும் ஈடுபடாதீர்கள்

### எச்.ஐ.வி. பரிசோதனை கருவிகளுக்கும் தட்டுப்பாடாம்

கொழும்பு, ஜூன் 9

இலங்கையில் பாதுகாப்பற்ற பாலுறவில் ஈடுபட வேண்டாம் என எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எச்.ஐ.வி. பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் பரிசோதனைக் கருவிகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதால் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்தப் பரிசோதனை கட்டாயம் மேற்கொள்ளப்படுகின்றமையினால் அவர்களுக்கு வருடத்துக்கு சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் சோதனைக் கருவிகள் தேவைப்படுகின்றன.

ஏனைய நோயாளிகளுக்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சோதனைக் கருவிகள் தேவைப்படுகின்றன. உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளிடம் ஏற்கனவே சோதனைக் கருவிகள் கோரப்பட்டுள்ளன.

அவற்றைப் பெற மூன்று முதல் நான்கு மாதங்கள் ஆகும் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தில் எந்தவொரு பாகுபாடுமில்லை

## எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வழங்கப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் நிராகரித்துள்ளது.

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் நாளாந்த அல்லது இரண்டு மூன்று நாள்களுக்கு ஒருமுறை சிறிய அளவில் எரிபொருள் வழங்கப்படுவதாக சங்கத்தின் பிரதித் தலைவரான குசும் சந்தநாயக்க தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எரிபொருளை பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறும், தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். (ஒ-இ)

## செயல்திறன்மிக்க துறைமுகமாக கொழும்பு துறைமுகம் தெரிவு

கொழும்பு, ஜூன் 9

கொழும்பு துறைமுகமானது உலகில் உள்ள 370 துறைமுகங்களில் 22ஆவது இடத்தையும், இந்து சமுத்திரப் பகுதியில் 3ஆவது இடத்தையும், இந்திய துணைக்கண்டம் மற்றும் தெற்காசியாவில் மிகவும் செயற்திறன்மிக்க துறைமுகமாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

எஸ்.பி. குளோபல் மார்க்கெட்டிங் இன்டெலிஜென்ஸ் சமுத்திர, வர்த்தக மற்றும் விநியோகப் பிரிவு மற்றும் உலக வங்கியின் உலகளாவிய போக்குவரத்து நடவடிக்கை ஆகியவற்றுடன் இணைந்து வெளியிடப்படும் கொள்கலன் துறைமுக செயற்திறன் குறியீட்டில் 2021 இந்தத் தரவுகள் பதியப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுகமானது 2021 ஆம் ஆண்டில் 7.25 மில்லியன் கொள்கலன்களைக் கையாளும் திறனைக் காட்டியுள்ளது. கடந்த ஆண்டின் இக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முதல் ஐந்து மாதங்களில் 2 வீதம் மேலும் வளர்ச்சியடைந்துள்ளது. (ஒ-இ)

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படும்

### டொலரை நாட்டுக் கொண்டு வர அரசு கவர்ச்சிகர அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

வெளிநாட்டில் உள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு சலுகைகளையும் பல ஊக்குவிப்புத் திட்டங்களையும் வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சில வரிச்சலுகைகள், வட்டியில்லா அல்லது மிகக் குறைந்த வட்டியில் வீட்டுக்கடன் திட்டம் மற்றும் சலுகை அட்டை ஒன்றையும் மிக விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கிடையில், அவர்களின் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பி, ஏதாவது நிவாரணத்தை வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)



## வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடுபவர்கள் பதிவு செய்யலாம்

### அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்க்கும் அரச ஊழியர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குச் சென்று அரச ஊழியர்கள் தங்கள் தகவல்களை உள்ளிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் தலையீட்டுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்கு மிகவும் அவசியமான அந்நிய செலாவணியை கொண்டு வருவதற்கான விரைவான திட்டம் இது என்றும் அவர் கூறினார். (ஒ-இ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை

கொழும்பு, ஜூன் 9

கூரிய ஆயுதத்தால் தாக்கி நபரொருவர் படுகொலை செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கம்பஹா ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெந்தலியத்தபாலுவ பிரதேசத்தில் இடம்பெற்றது.

இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் நபரொருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கனேமுல்ல, கெந்தலியத்தபாலுவ பகுதியைச் சேர்ந்த 55 வயதானவர் என்றும் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஒ-14-இ)

# ஹெரோய்ன் பாவனையாளரால் நாட்டை முன்னேற்ற முடியாது!

### அமைச்சர்களை பந்தாடுகிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 9

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பலர் ஹெரோய்ன் பாவிப்பவர்கள். அவர்கள் ஹெரோய்ன் பாவித்துவிட்டு இரவு விடுதிகளில் விபசாரிகளுடன் நேரத்தைச் செலவிடுகின்றனர். இவர்களால் நாட்டை முன்னேற்ற முடியாது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அமைச்சரவையால் தேசத்தைக் காப்பாற்ற முடியாது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் உள்ள 50 வீத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மோசடி செய்பவர்கள். அதனால் அவர்களால் இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்ற முடியாது.

தொலைநோக்குப் பார்வை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் 15 வீத மானோர் அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்கப்பட வேண்டும். தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சிலர் ஹெரோய்ன் போதைப்பொருளை உட்



கொண்டு இரவு விடுதிகளில் விபசாரிகளுடன் நேரத்தை செலவிடுகின்றனர். அவர்களால் தேசத்துக்கு என்னதான் செய்துவிட முடியும் என்றார். (ம)

## சம்பிக்க ரணவக்க தனித்து இயங்குவார்

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, சுயாதீன உறுப்பினராக இயங்குவதற்கு தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டியில் உள்ள 43ஆவது பிரிவு அலுவலகத்தில் தனது ஆதரவாளர்களுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

சபையில் சுயாதீனமாக இருந்தாலும், அமைச்சுப் பதவிகளை ஏற்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ள பாட்டலி சம்பிக்க ரணவக்க, சுயாதீனமாக இருந்துகொண்டே எரிசக்தி நெருக்கடியைத் தீர்ப்பதற்கான திட்டங்களை முன்வைப்பேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வி.கழகங்களுக்கான தடகளப் போட்டிகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகள் குறித்த தினத்தில் காலை 7 மணிக்கு முன்னர் மைதானத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14.9)

## மடம் திறந்து வைப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மடத்தடியில் அமைக்கப்பட்ட மடம் நாளை மறுதினம் சனிக்கிழமை திறக்கப்படவுள்ளது.

குறித்த பகுதியில் கடந்த காலத்தில் மடமும் குடி தண்ணீர் கிணறும், சுமைதாங்கியும் காணப்பட்டது. காலப்போக்கில் பராமரிப்பின்றிக் காணப்பட்டு போரில் முற்றாக சேதமடைந்தது.

இந்த நிலையில் மடம் புனரமைப்பதற்கு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.கஜிதன், கடந்த 2020 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்தார். இதற்கமையவே மடம் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட வுள்ளது. (ஒ-14. 9)

### கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தின்

# கட்டளைச் சேவகர் பணியிடை நிறுத்தம்

### நீதிமன்றத் தீர்ப்பை கையளிக்க அத்துமீறிச் செயற்பட்டாராம்

கொழும்பு, ஜூன் 9

கொழும்பு வணிக மேல் நீதிமன்றின் கட்டளை சேவகர் (பிஸ்கால்) பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள் ளார். நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சு அவரை பணியில் இருந்து இடை நிறுத்தம் செய்து அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் ஏரோ புளொட் விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்றை இலங்கையிலிருந்து வெளியேற விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை, விமான கட்டுப்பாட்டு மையத்துக்குள் அத்துமீறி பலாத்காரமாக நுழைந்து கையளித்தார் என்று அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பிஸ்காலுடன் இணைந்து நீதிமன்றத்தின் தடை உத்தரவை எடுத்துச் சென்றதாகக் கூறப்படும், மனுதாரர் தரப்பின் சட்டத்தரணிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை பிரதம நீதியரசருக்கு நீதி அமைச்சு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக, நீதி அமைச்சரின் இணைப்புச் செயலர் சட்டத்தரணி தசுன் நாகஸ்ஹேன குறிப்பிட்டார். (ம)

# அல்லாரையில் வாள்வெட்டு

### குடும்பஸ்தர் படுகாயம்

சாவகச்சேரி, ஜூன் 9

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லாரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சிவகுரு அன்பழகன் (வயது-47) என்ற குடும்பஸ்தரே வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்.

அல்லாரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11மணிக்கு சைக்கிளில் குடும்பஸ்தர் பயணித்துக் கொண்டிருந்தார். இதன்போது திடீரென வீதியின் குறுக்கே வாளுடன் வந்த இனந்தெரியாத நபர், குடும்பஸ்தரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார். படுகாயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14.125)

## அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்!

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை மற்றும் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவிகளுக்கு வடமாகாண பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை தத்தமது வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலைகளில் கடமையாற்றிய இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த அதிபர்கள் வேறு பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டதையடுத்து வெற்றிடம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி

சாவகச்சேரி, ஜூன் 9

தென்மராட்சி கல்விவலய கணினி மற்றும் தொலைக் கல்வி மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கணினிப் பயிற்சி நெறியில் க.பொ.த. சாதாரண தர மற்றும், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மூன்று மாதகால இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் தென்மராட்சி கல்வி வலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ம-9)


# மரண அறிவித்தல்

## செல்வி அஷ்சரா



நீர்வேலி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாக கொண்ட செல்வி அஷ்சரா 08.06.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அன்ரன் பிரதீப மற்றும் தர்ஷினி தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற குணநாயகம் மற்றும் இராசம்மா, காலஞ்சென்றவர்களான இக்னேசியஸ், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செந்தில்செல்வி, கருணாவதி, காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் வாணி ஆகியோரின் பெறாமகளும், துரைராஜசிங்கம் (France), மல்லிகாதேவி (Canada), தவராஜ சிங்கம் மற்றும் சற்குணராஜா (Canada) ஆகியோரின் பேர்த்தியும் சில்வன், மெர்லின், தெரேசா, டெனிஸ், ஜெனிக் வேதா, ரெஜினா லுசி, தனுஸ் மற்றும் சந்தோஸ் ஆகி யோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு, நீர்வேலி

077 625 5345
077 134 5351

தகவல்: குடும்பத்தினர்
ஐ.தவராஜசிங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



திருமதி
## செல்வராணி சகாதேவன்
(ஓய்வு பெற்ற அதிபர் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

நிலாவின் நினைவுகளோடு
நிதமும் வாழ்ந்த தாய் ..
நீதியின்றிய பதினைந்தாம் ஆண்டில்
நிறைவாக்கியதேனோ வாழ்வை...

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு
நண்பன் நிலக்சன் குடும்பத்தின் துயரில்
பங்கெடுக்கின்றோம்.

2004 உயர்தரம்

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 • 08 • 1940



மறைவு 08 • 06 • 2022

## சிவகுரு கணேசன்

காரைநகர், மடத்தடி, கருங்காலியை பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான தற்போது காரைநகர், மடத்தடி கருங்காலியை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு கணேசன் (Foreman - அரசாங்க அச்சகம், முகாமையாளர் - சரஸ்வதி மண்டபம், அகில இலங்கை சமாதான நீதவான்) 08.06.2022 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு தனுக்கோடி தம்பதிகளின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும் சங்கநிதியின் அன்புக்கணவரும் கோசியதேவி, சிவபாலினி (மாலினி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஷ்ணுகாந்தன், திருச்செல்வம் ஆகியோரின் மாமனாரும் கபிஷ்கா, ஹரினி, கைரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2022) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் காரைநகர், மடத்தடி, கருங்காலியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருங்காலி, காரைநகர்.

071 440 2366 - கோசியா
+16134136199 - மாலினி

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில்
அலுவலக உதவியாளராக கடமையாற்றிய
**ஜெபநேசன் கிறிஸ்டி ஜெயரூபன்** அவர்கள்
கடந்த 2022.06.04 ஆம் திகதி சனிக்கிழமை அன்று
இறைபதம் அடைந்துவிட்டார் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(cr.36095) (2.6)

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**


RG

# ஆர். ஜி ரேடர்ஸின் விசேட விலைக்கழிவு

**ஆர்.ஜி ரேடர்ஸ் மற்றும் ரட்ணம் பிறதேர்ஸின் 20ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு இம்மாத இறுதிவரை வழங்கும் விசேட விலைக்கழிவினைப் பெற்றிடுங்கள்**

I. CHAIN WHEEL SET - (ALL 150 CC HERO MODELS) - 8500 /= 6975 /=
II. CHAIN WHEEL SET - (ALL 100CC HERO MODELS) - 7885 /= 5450/=
III. TIMING CHAIN KIT (GLAMOUR,SUPER SPLENDER) - 7285/= 4430/=
IV. ACCERALETER CABLE (HUNK, ACHIUER,X-TRRME) - 1050 /= 805/=
V. BREAK SHOE (ALL HERO MODELS) - 2910 / = 2400 /=
VI. SPARK PLUG (ALL HERO MODELS) - 920 /= 700/=
VII. SHAKO HELMET - 5300 /= 3500 /=
VIII. TYRE (ALL SCOOTER MODELS - 8000 /= 6500 /=
(CEAT,PUMA,MRF, TVS
IX. OIL - CALTEX - 2285 /= 1750 /=
X. MOTUL OIL (MOTOR BIKE) - 2650/= 1990 /=



இத்துடன் அனைத்து மோட்டார் வாகனங்களுக்குரிய
பற்றிகளுக்கும் 20 % விலைக்கழிவு வழங்கப்படும்.
HONDA GENERATOR, MICROTEK, LUMINOUS 1000 W இருந்து 2500 W வரை INVERTER களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
021 222 7667 / 021 222 6185, 077 734 0056 /
077 674 7051/ 071 971 0981
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**R.G.Traders**
**291, STANLY ROAD JAFFNA.**


# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
22
01
1940



மறைவு
12
05
2022

கடந்த (12.05.2022) அன்று சிவபதமடைந்த
எமது இல்லத்தலைவி

## திருமதி இராசையா கமலாதேவி

அவர்களது இறைத்துவம் அறிந்து பல்வேறு வழிகளில் எம்மை தொடர்பு கொண்டு உதவிக்கரம் வழங்கிய. ஆறுதல் கூறிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் அன்னாரின் குடும்பதினர் இருதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு நாளை (10.06.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் மற்றும் மதியபோசனதில் கலந்து சிறப்பித்து அன்னாரின் அமரத்துவத்திற்கு ஆசி வழங்குமாறும். தாழ்மையுடன் தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

**வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு,**
**கொக்குவில்.**

(cs 45115) (2.6)

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு
14
04
1946



இறப்பு
07
06
2022

## திரு. பாவிலு யேசுதாசன்

வெற்றிலைக் கேணியைப் பிறப்பிடமாகவும் இல.62, இலந்தைக்குள வீதி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பாவிலு யேசுதாசன் கடந்த 07.06.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாவிலு மரியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், பார்பறம்மா அவர்களின் பாசமிகு கணவரும் அன்ரனி பெனடிற் (ஸ்பீட் மார்க்கட் உரிமையாளர்). விஜயகுமார் (பிரான்ஸ் - றோஜா மார்கட் உரிமையாளர்). டயானா (பிரான்ஸ்). டயஸ், டங்கேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜெயதாஸ், சங்கீதா, புஷ்பானந்தி, மலர். லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் அடைக்கலம், அந்திரேஸ், லூத்தம்மா, ஜோசேப், பிலோமினா, ஜபிரியே, சேமாலயம், அருள்ஞானம், பென்ஷமின், தவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.06.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து செம்மணி சித்துப்பாத்தி மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

# மரண அறிவித்தல்

தோற்றம்
27
09
1952



மறைவு
07
06
2022

## திருமதி. செல்வராணி சகாதேவன்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. செல்வராணி சகாதேவன் நேற்றுமுன்தினம் (07.06.2022) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசகாரியர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சகாதேவன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், ஷதூர்ஷன் (கணினிப் பிரயோக உதவியாளர், யாழ்.பல்கலைக்கழகம்) மற்றும் காலஞ்சென்ற நிலக்ஷன் (ஊடகவியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வாசுகியின் (முகாமைத்துவ உதவியாளர், யாழ். பிரதேச செயலகம்) அன்பு மாமியாரும், நிலாஷனின் (மாணவன், யா/கொ.இ.ஆரம்பப் பாடசாலை) பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2022) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு "நிலா இல்லம்" ஆடியபாதம் வீதி, கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:
**077 985 2110 - மகன்**
**021 205 2424**

தகவல்:
**கணவர் - திரு.இ.சகாதேவன்**
**மகன் - திரு.ச.ஷதூர்ஷன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 09 . 1940



மறைவு
08 . 06 . 2022

## திரு. பொன்னையா பாலசிங்கம் (அப்பு)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.பொன்னையா கதிரேசன் பாலசிங்கம் (ஜனாதிபதி விருது பெற்ற திரைப்பட ஒலி தொழில்நுட்பவியலாளர்- Sound Engineer) அவர்கள் நேற்று (08.06.2022) புதன்கிழமை நல்லூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய திரு.திருமதி பொன்னையா, கமலா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இந்திராதேவி பாலசிங்கம (ஓய்வு நிலை ஆசிரியை- யா/இந்து மகளீர் கல்லூரி) அவர்களின் கணவரும், திரு பொன்னையா பாஸ்கரசிங்கம் அவர்களின் பாசமிகு தம்பியும் காலஞ்சென்றவர்களான ராஜலஷ்மி பாஸ்கரசிங்கம், சரோஜினிதேவி, கமலாதேவி, Dr.கருணாகரன் ஆகியோரின் மைத்துனரும் சாந்தியை பட்சமுள்ள மகளாகவும் காலஞ்சென்ற ரஜீவ் அவர்களை மகனாகவும் ஷனாயா சூரியை பேர்த்தியாகவும் கொண்டுள்ளார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் 56, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:- 077 010 6858**

தகவல்:
குடும்பத்தினர்.

## நாஹறா மருத்துவ நிலையம்

கை, கால் விறைப்பு, நோ, எரிவு, செயலிழப்பு, அல்சர், முழங்கால் எலும்புதேய்வு, தீராதபுண்கள், தீராதநோய்களுக்கு சிறப்பு சிகிச்சை.

**T.P.: 077 321 2740**

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **வான்மதி விஜயதாசன்** அவர்களின்
அன்புத் தந்தையார்
**வல்லிபுரம் தம்பிஜயா**
அவர்கள் கடந்த (03.06.2022) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs.45113) (2.6)

ஆசிரியர் வட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
27.09.1952



மறைவு
07.06.2022

## திருமதி செல்வராணி சகாதேவன்

(முன்னாள் அதிபர்,
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபரும் எமது வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் ஆர்வலரும் ஆகிய அன்னாரின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு எமது கழகத்தின் இறுதி அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம். கல்விக்காக அன்னார் ஆற்றிய சேவையையும் இத்தருணத்தில் நினைவு கூர்கின்றோம்.

**சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.**

(cs 45112) (2.6)

**கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக்கழகம்
&
வளர்மதி நிறைவாழ்வகம்.**

## நிர்வாகத்தெரிவு

சாவகச்சேரி ஜூன் 9

பகிரங்க சேவை ஓய்வூதியம் நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது வருடாந்தம் பொதுக் கூட்டம் அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவர் செ.சுப்பிரமணியம் உபதலைவர் மு.பாலசுப்பிரமணியம், செயலாளர் சு.உலகநாதன், உதவிச் செயலாளர் க.தர்மராஜா, பொருளாளர் ச.விஜயநாதன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக க.பாலசுப்பிரமணியம் மற்றும் ம.மனோரதி ஆகியோரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். (ய -9)

# CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING
# UNIVERSITY OF JAFFNA

## Certificate Course in Basic ICT Skills

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applicationsfrom the eligible candidates for the above course.**

### PROGRAMME OBJECTIVES

- Fundamentals of a computer system, Network and Internet
- The uses and impacts of new technologies inICT.
- Developing a fully completed document. (MS Word)
- Handling spreadsheet application software. (MS Excel)
- Creating an efficient database. (MS Access)
- Creating effective presentations. MSPowerPoint)

### ENTRY REQUIREMENTS

- An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream

### DURATION

- The duration of the course of 60 hours
- Classes will be conductedin weekends

### COURSE FEE

- **Course Fee Rs.20000.00**

### How to Apply

- Application could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffna during 9.00am to 2.00pm on weekdays.
- Application form could be downloaded from the website www.codl.jfn.ac.lk
- Duly filled application along with the payment slip for a sum of Rs.500/= payable at the Peoples Bank. AC No: 890012520002088 should be sent under registered cover to the following address on or before 22nd June 2022. "Certificate Course in Basic ICT Skills" should be written on the left hand corner of the envelope. Address:

**Deputy Registrar,
Center for Open and Distance Learning,
University of Jaffna.
Registrar
University of Jaffna
08.06.2022**

(CR.36098) (2.6)

# பொது அறிவித்தல்

## ஆதனவரி அறவிடல் தொடர்பானது

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தெல்லிப்பளை உப அலுவலக பிரதேசத்திற்குட்பட்ட ஆதனங்களின் ஆதனவரி மீளாய்வு செய்யப் பட்டதற்கமைய ஆதனங்களின் ஆதனவரியினை 10% மாக அறவீடுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் 2022.07.01 ஆம் திகதி முதல் தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களின் வரிவீதம் 10% ஆக அறவீடுசெய்யப்படும் என்பதனை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.**

(cr.36096) (2.6)

# நீங்காத நினைவுகளில்
# ஒன்பதாம் ஆண்டு நிறைவு

மலர்வு
31 . 07 . 1974



உதிர்வு
20 . 05 . 2013

## அமரர் மதியாபரணம் மதிவதனன்

(கரைத்துறைப்பற்று பிரதேச சபை)

பாதி வாழ்க்கையிலே கண்ணிமைக்கும் முன்னே
மறைந்து விட்ட உமதுறவின் நீங்காத நினைவுகளும்
உதிர்ந்துவிட்ட உனதன்பின் உலராத வாசனையும்
ஆண்டுகள் ஒன்பதென்ன பலகோடி ஆனாலும்
அகலாது எம்மை விட்டு

என்றும் உங்கள் பிரிவுத்துயரில்
மனைவி, மகள், அக்கா, அத்தான், மருமக்கள்மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நள்ளிரவு முதல்...

நேற்று நள்ளிரவுடன் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் கடமைகளில் இருந்து விலகிக் கொள்வதால் இன்று மின் தடை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன என்று கூறப்படுகின்றது.

விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் நேற்று நடந்த பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளன என்றும், திட்டமிட்ட வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இதுவென்று சங்கத்தின் தலைவர் ரஞ்சித் இந்துவர தெரிவித்தார்.

'இன்று (நேற்று) நள்ளிரவு 12 மணி முதல் பணியில் இருந்து விலகுவோம். முடிந்தால் யாராவது பொறுப்பேற்று இந்த அமைப்பைச் செயற்பட வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில், அனைத்து மின் ஊழியர்களும் படிப்படியாக விலகுவார்கள்.

அத்தகைய சூழ்நிலையில் கணினிக் கட்டமைப்பை பாதுகாக்க, அனைத்து இயந்திரங்களும் கோட்பாட்டளவில் நிறுத்தப்படவேண்டும். அனைத்து ஊழியர்களும் காலை 8 மணிக்குள் வெளியேறுவார்கள். அப்போது நாட்டில் மின்சாரம் என்ற ஒன்று இருக்காது என்றும் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர எச்சரித்துள்ளார்.

மருத்துவமனைகளில் சேவைகள் தடைப்படும். நோயாளிகளின் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படும். எங்கள் கோரிக்கைக்கு அமைச்சர் செவிசாய்க்கவில்லை. நாளை (இன்று) மின்சாரச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளே நாட்டை பேரழிவுக்குள் தள்ளியுள்ளனர் - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

*(தொடர்புடைய செய்தி உள்ளே)*

## யாழ். நகரில்...

அணி மேற்கொண்ட நடவடிக்கையிலேயே முச்சக்கர வண்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பின்புறம் உள்ள வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி திருடப்பட்டிருந்தது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திருடப்பட்ட முச்சக்கர வண்டி பருத்தித்துறை பொலிஸ் விசேட அணி மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் துன்னாலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## ஜோன்ஸ்டன்..

செய்துள்ள நிலையில், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான பிடியாணையை கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது.

சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் சமர்ப்பித்த கோரிக்கைக்கு அமையவே கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்தப் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 9ஆம் திகதி கொழும்பு, காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது மஹிந்த ராஜபக்சவின் ஆதரவுக் காடையர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதையடுத்து நாடு முழுவதும் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியதுடன், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் தாக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளில் சந்தேநபராக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெயரிடப்பட்டுள்ள நிலையில், அவர் வழக்கு விசாரணைகளில்முன்னிலையாகவில்லை. கடந்த ஒருவாரமாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தேடிவருகின்றது போதும், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்தநிலையில், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் சட்டத்தரணிகளால் ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த ரிட் மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில், நேற்று கொழும்பு கோட்டை நீதிமன்றம் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (அ-எ-இ)

## நாடாளுமன்றத்துக்கு...

சர்வதேச முதலீட்டு வாய்ப்புகளுடன் தொடர்புடைய அமைச்சுப் பதவியொன்று அவருக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன. டொலரை உள்ளீர்ப்பதே இவருக்கான பிரதான பணியாக வழங்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான பஸில் ராஜபக்ச, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இன்று பதவி விலகவுள்ளார். அந்த வெற்றிடத்துக்கே தம்மிக்க பெரேரா உள்வாங்கப்படவுள்ளார். (அ-எ-44)

## சேமித்த...

பிறேமலதா (வயது-41) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார்.

தீக்காயங்களுக்கு உள்ளானவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

அறையொன்றுக்குள் பெற்றோல் சேமிக்கப்பட்டிருந்தது என்றும், அதில் தீப்பற்றிக் கொண்டதாலேயே இந்த விபத்து நடந்தது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-இ)

## லொறி உடைத்து...

ளார். இந்தத் திருட்டுத் தொடர்பில் இன்னுமொருவர் தேடப்பட்டு வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள இலத்திரனியல்பொருள்கள் விற்பனை நிலையத்தின் களஞ்சியம் கோண்டாவிலில் உள்ளது. கடந்த மாதம் வர்த்தக நிலையத்துக்கு எடுத்து வருவதற்காக பாரவூர்தியில் பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் டீசல் இல்லாததால் வாகனம் தரித்துவிடப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் இரவு வேளை பாரவூர்தி உடைக்கப்பட்டு சுமார் 11 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

இந்தத் திருட்டுத் தொடர்பில் வர்த்தகரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கோண்டாவிலைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவரே பொருள்களைத் திருடியுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், அவர்களில் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரிவித்தனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக ஏற்கனவே 4 வழக்குகளில் நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-26)

## மின்சார...

கோரிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் போவதில்லை என மின்சக்தி அமைச்சரான காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

மின்சார சபைத் தொழிற்சங்கங்கள் தங்கள் சொந்த சம்பளத்தை செலுத்துவதற்காக கட்டணங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக, புதுப்பிக்கத்தக்க செயற்றிட்டங்களை முன்னெடுக்கவும், உற்பத்தி செலவைக் குறைக்கவும் அனுமதிக்க வேண்டும்.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அவர்களது சம்பளம் 25 வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டுமென இலங்கை மின்சார சபை கூட்டுஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அல்லது உற்பத்திக்கான செலவுக் குறைப்புக்குரிய திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படாமையால், அதிக சம்பளம் மற்றும் உற்பத்திச் செலவுகள் நேரடியாக நுகர்வோரின் தலையிலேயே சுமத்தப்படுகின்றது' என்று தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## யாழ்ப்பாணம்...

வரப்படவுள்ளன. பிரதேச செயலாளர்கள் தங்கள் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு உரிய நேரத்துக்குச் சென்று சரிபார்த்து பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 200 பொதிகளும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 927 பொதிகளும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 700 பொதிகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 400 பொதிகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய ஆயிரத்து 120 பொதிகளும், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய ஆயிரத்து 300 பொதிகளும், உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 750 பொதிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய ஆயிரத்து 300 பொதிகளும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 860 பொதிகளும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 900 பொதிகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு 50 கிலோகிராம் எடையுடைய 413 பொதிகளும் வழங்கப்படவுள்ளன. (அ-எ-5)

## சஜித்...

வக்கவின் 43ஆம் படையணி வெளியேறத் தயாராகி வருகின்றது. அதன் ஆரம்பகட்ட நகர்வாகவே நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக சம்பிக்க ரணவக்க நேற்று அறிவித்துள்ளார்.

'தனிப்பட்ட காரணங்களுக்காக அல்லாமல், கொள்கை மற்றும் மனச்சாட்சியின் பிரகாரமே இந்த முடிவை எடுத்தேன். தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் மற்றும் எதிரணி கூடுதல் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுயாதீனமாகச் செயற்பட்டாலேயே அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியும் என்று நம்புகின்றேன். சர்வகட்சி அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இப்போது இருப்பது சர்வகட்சி அரசாங்கம் அல்ல .

எனக்கு வாக்களித்த மக்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். எதிரணியில் இருந்து சிறந்த திட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவேன்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். (அ-எ-44)

*(தொடர்புடைய செய்தி உள்ளே)*

## மின்விநியோகம்...

நேற்று நள்ளிரவு முதல் மின்சார பொறியியலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## யாழ்...

தளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குக்கும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா 250 எரிவாயு சிலிண்டர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு 400 எரிவாயு சிலிண்டர்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாளை ஆரம்பமாகிறது போர்





யாழ்ப்பாணம், ஜூன் 9
இந்துக்களின் போர் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுதினம் சனிக்கிழமையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. இதுவரை நடைபெற்ற 10 ஆட்டங்களில் நான்கில் கொழும்பு இந்துக் கல்லூரியும், ஒரு ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன. ஏனைய ஐந்து போட்டிகளும் சம நிலையில் முடிந்தன.

இதனுடன் இணைந்த நிகழ்ச்சியாக நாளை மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் சொல்லாடல் விவாத அரங்கும் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கும் விதை நாற்றுகள் வழங்கலும்



மன்னார், ஜூன் 9
மன்னார் மாவட்டச் செயலக அலுவலர்கள் நலன்புரி சங்கத்தால் நடத்தப்படும் வீட்டுத்தோட்டச் செய்கை போட்டியில் கலந்துகொள்ள தங்களுடைய பெயர் விவரத்தை வழங்கிய அலுவலர்களுக்கான வீட்டுத்தோட்டச் செய்கை பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கும் விதை நாற்றுகள் வழங்கும் நிகழ்வும் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் அலுவலர்களுக்கு நாற்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஒ-14, 213)

## எரிபொருள் இருப்பை அறிய கைபேசிச் செயலி அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் இருப்பு விவரங்களை அறிக்கையிடுவதற்கு கைபேசிச் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள எரிபொருள் இருப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இந்தக் கைபேசிச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயலியைப் பயன்படுத்தி முற்பகல் 10 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் உள்ள எரிபொருள் இருப்புக்களின் தரவுகளைப் பெற்று முற்பகல் 11 மணிக்கும், பிற்பகல் 4 மணிக்கும் பிரதேச செயலர்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்காகப் பொருத்தமான தகுதிவாய்ந்த உத்தியோகத்தரை ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பொறுப்பளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜூன் 9
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் நடத்தப்பட்ட இலவச கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் யோகா, கராத்தே உட்பட பல்வேறு கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ-இ)

**Vacancies**

Driver, Online Job (Parttime/Full time), Cashier, Manager, Typing, Web Admin, Sales

Interview :
11.06.2022 10.00-12.30 PM

**DEWMAS**
51, Amman Road, Nallur
0777733368, 0741383368

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

✓ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
✓ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
✓ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
✓ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
✓ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
✓ 1 பரப்பின் விலை 3 லட்சம்
✓ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை.

தொடர்பு: 076 658 3621
076 436 5814

(CS 1153) 1-6

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்**
**4 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

நிலப்பரப்பு
❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
❖ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
❖ வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 241 7589

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 15 பரப்புக்காணி விற்பனைக்கு.
நிலப்பரப்பு.




✓ 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
✓ வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக் காணி.
✓ நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.
✓ பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணிவரை.

077 62 34 204
077 28 80 152

(CS 1153 B) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org